


# 7 நிதித்தேவைகளும் முதலீட்டு வழி மூலங்களும்



**இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம்**

- வணிக நிதித் தேவைகள்
- நிதி திரட்டும் வழி முறைகள்
- நிதிமூலங்களை மதிப்பீடு செய்தல்
- நிதிதிரட்டும் வழி முறைகளைத் தெரிவு செய்தல்
- முதலீட்டு வழிமுறைகளை மதிப்பீடு செய்தல்
- பல்வேறு முதலீட்டு வழி முறைகளின் அனுகூலங்கள்
- முதலீட்டு வழி முறைகளைத் தெரிவு செய்யும்போது கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகள்

ஆகியன தொடர்பான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வீர்கள்.

## மூலதனச் சந்தையைத் தேடியறிந்து பொருத்தமான தீர்மானங்களுக்கு வருவோம்

*தொலைக்காட்சியில் வாரம்தோறும் இடம்பெறும் கலந்துரையாடல் நிகழ்ச்சியின் ஒருபகுதி கீழே தரப்படுகின்றது.*

இர்பான் : வணக்கம் இன்று நிகழ்ச்சியில் சுபா, இர்பான் ஆகிய எங்களுடன் பிரபல்யமான கம்பனியொன்றில் நிதி முகாமையாளராகக் கருமமாற்றும் பானுகோபன் அவர்களும் கலந்து கொள்கிறார்கள்.

சுபா :- வணக்கம், பானுகோபன் ஐயா உங்களை இந்நிகழ்ச்சிக்கு மிக அன்புடன் அழைக்கிறோம்.

பானுகோபன்:- வணக்கம்

இர்பான் :- எமது முதலாவது வினா வணிகங்களின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும் சாதாரண வீட்டு நடவடிக்கைகளுக்கும் பொதுவான அடிப்படைத் தன்மைகள் இருக்கிறதா?

பானுகோபன் :-ஆம் உண்மையாக. வணிகமொன்றிலும் சரி, வீட்டிலும் சரி பல்வேறு முறைகளில் நிதியீட்டம் செய்வதையும் அவற்றைப் பல்வேறு நடவடிக்கைகளில் பயன்படுத்துவதையும் காணலாம்.

சுபா :- மேலும் எங்களுக்கு விளக்கம் தாருங்கள்.

பானுகோபன் :-தனி நபர்கள் தமது நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. தனிநபர் கடன், தொழிலில் ஈடுபடுதல், கட்டடங்கள் போன்ற சொத்துக்களை வாடகைக்கு விடல், சொத்துக்களின் மூலம் வருமானத்தைப் பெறல் போன்ற பல்வேறு வகைகளில் பெற்றுக்கொள்கின்றனர்.

சுபா :- அப்படியானால் எல்லோரும் நிதியினைப் பெற்றுக் கொள்வது ஒரே வகையாக இல்லைத் தானே!

பானுகோபன் :- அனைவரும் நிதியை பெற்றுக் கொள்வது ஒரே வகையற்ற-தாயினும் செலவு செய்வதில் ஒத்த தன்மை இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இர்பான் :- நீங்கள் எங்களுக்கு இது தொடர்பாக மேலும் விளக்கமளித்தால் நல்லது.

பானுகோபன் :- நபர்கள் நிதியைப் பயன்படுத்தும் இரண்டு முறைகளை நாம் அறிந்து கொள்ள முடியும். அன்றாடக் கருமங்களுக்காக பணத்தைப் பயன்படுத்துவது அதில் ஒரு முறையாகும். அதாவது அரிசி, மரக்கறி, மருந்து, சவர்க்காரம் போன்றவற்றுக்கான செலவு.

சுபா :- அப்படியானால் அடுத்த வகைச் செலவு என்ன?

பானுகோபன் :- நீண்ட காலப் பயன்கருதி மேற்கொள்ளும் செலவுகள். குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி, ஆடை துவைக்கும் இயந்திரம் போன்றவற்றை அடிக்கடி வாங்குவதில்லைத் தானே?

இக்கலந்துரையாடலை வாசிப்பதன் மூலம் தனி நபர்களது நிதியீட்டல் வழிமுறைகள் மற்றும் பயன்படுத்தல் தொடர்பாக விளக்கத்தைப் பெற்றிருப்பீர்கள். தனி நபர்களைப் போன்று வணிகங்களுக்கும் பல்வேறு நிதித்தேவைகள் இருக்கின்றன இதற்காக வணிகங்கள் பல்வேறு முறைகளில் நிதியீட்டம் செய்து கொள்கின்றன.

**அறிமுகம்**

தனிநபர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யப் பணம் தேவையானது. இதற்காக வேண்டி பல்வேறு வழிகளில் பணத்தைத் திரட்டிக் கொள்கின்றனர். இதேபோன்று வணிகங்களும் பல்வேறு வகையில் திரட்டிக் கொள்ளும் பணத்தைத் தமது வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றன.

தனிநபர்களும் வணிகங்களும் தம்மிடம் உள்ள மேலதிக பணத்தை முதலீடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். வணிகமொன்று தனது மேலதிக நிதி வளத்தைப் பல்வேறு முதலீடுகளில் ஈடுபடுத்தும். இவ்வாறான முதலீட்டால் முதலீட்டாளர்கள் மட்டுமின்றி சமூகத்திற்கும் பல நன்மைகள் கிடைக்கின்றன. வணிகமொன்றின் நிதியீட்டம், நிதிப்பிரயோகம் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இவ் அத்தியாயத்தில் கலந்துரையாடப்படும்.

இவ்வத்தியாயத்தில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

- நீண்டகால நிதித் தேவைகள்
- குறுங்கால நிதித் தேவைகள்
- சாதாரணப் பங்குகள்
- முன்னுரிமைப் பங்குகள்
- முறையான முதலீடு
- சேமிப்பு வைப்புக்கள்
- நிலையான வைப்புக்கள்
- பங்குச் சந்தை
- முதலீட்டு இலாபம்
- உபகாரப் பங்குகள்
- உரித்து வழங்கல்
- நட்ட அச்சமும் அனுகூலங்களும்

## 7.1 வணிகங்களின் நிதித்தேவைகள்

மனிதத் தேவைகள் நாள்தோறும் விரிவடைந்து செல்கின்றன. இப் பின்னணியில் சந்தையின் நிலமைகளை நன்றாக அவதானிப்பதன் மூலம் பொருத்தமான வணிகச் சந்தர்ப்பங்களை இனங்காணலாம். வணிக நடவடிக்கைகளின் பொழுது நிதியீட்டம் செய்வதும் அந்நிதியினை முதலீடு செய்வதும் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களாகும். முதலில் நாங்கள் நிதித் தேவைகள் பற்றி அறிவோம். அதற்கான சந்தர்ப்பங்கள் வருமாறு

1. **வணிகமொன்றின் ஆரம்பக் கருமங்களை மேற்கொள்வதற்கான நிதித் தேவை**
   வணிகமொன்றை ஆரம்பிக்கும்பொழுது சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கும் செலவுகளை நிறைவு செய்து கொள்வதற்கும் நிதி தேவைப்படும்.

2. **வணிகத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளுக்கான நிதித்தேவை**
   வணிகம் புதியதுறை தொழில்முயற்சி ஒன்றை ஆரம்பித்தல், கிளைகளின் அளவைக் கூட்டுதல், உற்பத்தி, விற்பனை அளவை அதிகரித்தல் போன்றன விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் ஆகும். இதன்போது கட்டடம், உபகரணம், தளபாடம், வாகனம் போன்ற சொத்துக்களை அதிகரிக்க நிதி தேவைப்படும்.

3. **வேறு வணிகமொன்றை இணைத்துக்கொள்வதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கான நிதித் தேவை**
   வணிகமொன்று ஏனைய வணிகங்களை உடமையாக்கிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுவதுண்டு. இதற்காக நிதி தேவைப்படுகின்றது. உதாரணமாக தளபாட வியாபார நிலையமொன்றை நடத்திச் செல்லும் வணிகமொன்று வேறு தொழிற்சாலையொன்றை உரிமைப்படுத்திக் கொள்ளல்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**4. மேற்காட்டிய பிரதான நிதித் தேவைப்பாடுகளுக்கு மேலாக நாளாந்தம் பின்வரும் காரணங்களுக்காக நிதி தேவைப்படும்.**

- அன்றாட வணிக நடவடிக்கைகளை நடத்திச் செல்வதற்கு
  உதாரணம் :-
  - பொருட்களைக் கொள்வனவு செய்ய
  - பல்வேறு செலவுகளை மேற்கொள்வதற்கு

- எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்வுகளுக்கு முகம் கொடுப்பதற்கு
  உதாரணம் :-
  - எதிர்பாராத வகையில் கட்டளைகள் கிடைத்தல்
  - கடன்பட்டோரிடமிருந்து பணம் கிடைக்கப்பெறாது போதல்

மேற்காட்டியபடி வணிகமொன்றை ஆரம்பித்து நடத்திச் செல்லும் போதும் பல்வேறு நிதித் தேவைகள் ஏற்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள். வேறொரு வகையில் குறிப்பிடுவதாயின் வணிக நடவடிக்கைகளுக்காக முதலீடுகள் செய்யப்பட வேண்டும் மேலும் வணிகத்திற்கு ஏற்படும் நிதித்தேவைப்பாட்டினை காலத்தினை அடிப்படையாகக் கொண்டு கீழ்வருமாறு நோக்கலாம்.

**1. நீண்ட கால முதலீட்டிற்கான நிதித் தேவைப்பாடு**

வணிக நடவடிக்கைகளுக்கான நீண்ட காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதித் தேவைப்பாடு நீண்டகால நிதித் தேவைப்பாடாகும். அதாவது நிலையான சொத்துக்களை உரிமையாக்கல், நிர்மாணித்தல் போன்றன இதனுள் அடங்கும்.

**2. குறுங்கால முதலீட்டுக்கான நிதித் தேவைப்பாடு**

அன்றாட வணிக நடவடிக்கைகளை நடத்திச் செல்வதற்குரிய நிதித்தேவைப் பாடு குறுங்கால முதலீட்டுக்கான **நிதித் தேவைப்பாடு** எனப்படும். இதற்கமைய சம்பளம், காப்புறுதி, வரிகள், போக்குவரத்துக் கட்டணம், மின்சாரம், இறைகள், இருப்பு பேணல் போன்ற செலவுகள் இவ்வகையில் அடங்கும்.

மேற்காட்டிய இரு நிதித் தேவைப்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படும் பணத்தின் அளவு வணிக நடவடிக்கைகளின் தன்மைக்கேற்ப மாற்றமடையும் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

உதாரணம் :-
- மரக்கறி விற்பனை நிலையமொன்றிற்கான குறுங்கால முதலீட்டின் தேவைப்பாடு அதிகமாக இருக்கக் கூடும்.
- நிழற்பிரதி பண்ணும் சேவை நிலையமொன்றின் நீண்டகால முதலீட்டுத் தேவைப்பாடு அதிகமாக இருக்கக் கூடும்.

## 7.2 நிதி திரட்டும் வழிமுறைகள்

வணிகமொன்றிற்குப் பல்வேறு நிதித் தேவைகள் உண்டு எனவும் அதற்காகப் பணம் முதலீடு செய்யப்பட வேண்டும் எனவும் உங்களுக்கு விளங்கி இருக்கும். இப்பொழுது நிதியைத் திரட்டிக் கொள்ளும் முறைகள் தொடர்பாகக் கவனத்திற் கொள்வோம். அவையாவன

- நீண்ட கால முதலீட்டுத் தேவைக்கான நீண்டகால நிதியீட்டல் வழிமுறைகள்
- குறுங்கால முதலீட்டுத் தேவைக்கான குறுங்கால நிதியீட்டல் வழிமுறைகள்.

வணிக நடவடிக்கைகளுக்காக நிதியை முதலீடு செய்வதற்கும் அந்நிதியினைத் திரட்டிக் கொள்வதற்குமிடையே உள்ள தொடர்பு தற்போது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

### வணிக அமைப்புகளுக்கேற்ப நிதியீட்டல் வழிமுறைகளை இனங்காணல்

பொதுத் துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த பல்வேறு வகைப்பட்ட வணிக அமைப்புகள் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. சிலவகை வணிக அமைப்புகளின் நிதியீட்டல் வழிமுறைகள் பலவாக உள்ளமை அவற்றின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாகிறது. மேலும் சிலவகை வணிக அமைப்புக்களின் நிதியீட்ட வழிமுறை வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றமை அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாக அமைகிறது.

### தனியுடமை வணிகம்

உரிமையாளரின் சேமிப்புக்கள், குடும்ப அங்கத்தினர், உறவினர்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் பணம் என்பன முக்கியமான நிதியீட்டல் நடவடிக்கைகளாகும். நெருங்கிய உறவுகளின் மூலம் பெற்றுக்கொள்ளும் இப்பணத்தினை அதிகமான சந்தர்ப்பங்களில் வட்டியின்றிப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் வங்கிகள் நிதி நிறுவனங்களில் இருந்து கடன்களைப் பெற்றுக்கொள்ளலும் போன்ற வழிமுறைகளினாலும் நிதியீட்டல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

### பங்குடமை வணிகம்

பங்காளர்கள் மூலம் மூலதனத்தைத் திரட்டிக் கொள்வதே பங்குடமையின் பிரதான நிதியீட்டல் வழிமுறையாக இருக்கின்றது. மூலதனத்திற்கு மேலாகப் பங்காளர் வணிகத்திற்கு வழங்கும் கடன், தனிப்பட்ட கடன், வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்களிலிருந்து பெறும் கடன்கள் போன்றன பங்குடமை அமைப்பின்

ஏனைய நிதியீட்டல் வழிமுறைகளாகும். தனியுடமை வணிகங்களோடு பங்குடமை வணிகத்தை ஒப்பிடும் பொழுது நிதியீட்டல் செய்யக்கூடிய இயலுமை பங்குடமையில் அதிகமாகும் இது பங்குடமை வணிகத்தின் வளர்ச்சிக்கு நன்மை பயக்கக்கூடிய காரணமொன்றாக அமைகின்றது.

### வரையறுக்கப்பட்ட கம்பனிகள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

ஏனைய வணிக அமைப்புகளோடு ஒப்பிடும்பொழுது கம்பனிகளுக்கு பல நிதியீட்டல் வழிமுறைகள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு

- பங்கு வழங்கல்
- தொகுதி கடன் பத்திரங்கள் வழங்கல்
- ஈட்டுக் கடன்
- வங்கிக் கடன்
- வங்கியல்லாத நிறுவனக் கடன்கள்
- குத்தகைக் கடன்

### கூட்டுறவுச் சங்கங்கள்

இவ்வணிக அமைப்புகளிற்கு அங்கத்தவர்களிடம் இருந்து சேகரிக்கப்படும் அங்கத்துவக் கட்டணமே பிரதான நிதியீட்டல் வழிமுறையாக இருக்கின்றது. வங்கி மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கடன் பெறல். அரச நன்கொடை போன்றன கூட்டுறவுச் சங்கங்களின் ஏனைய நிதியீட்டல் வழிமுறைகளாகும்.

### பொதுத்துறை வணிகங்கள்

அரசு, மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றின் மூலம் நடத்திச் செல்லும் வணிக நடவடிக்கைகள் பொதுத்துறை வணிகங்கள் எனப்படும். அரசின் மூலம் வழங்கப்படும் பணமே இவ்வகையான நிறுவனங்களின் பிரதான நிதியீட்டல் வழிமுறையாக இருக்கின்றது. சில அரச நிறுவனங்கள் பொது மக்களுக்கு பங்குகளை வழங்குவதன் மூலமும் நிதியீட்டம் செய்கின்றன.



**செயற்பாடு 01**

நீங்கள் ஆடை தயாரிக்கும் தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ளதாகக் கருதுங்கள். அவ்வணிகத்தை ஆரம்பிப்பதற்கு

1. உங்களுக்குத் தேவைப்படும் வளங்களை நிரற்படுத்துங்கள்
2. அவ் வளங்களுக்காக நிதியைத் திரட்டும் வழிமுறைகளை விளக்குங்கள்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## 7.3 நிதி வழிமுறைகளின் மதிப்பீடு

வணிக அமைப்புகள் தமது வணிக நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியினைத் திரட்டிக் கொள்ளும் முறைகள் மேற்கூறப்பட்டுள்ளது. இப்பொழுது அவ் வழிமுறைகளினது அனுகூலங்களை அறிவோம்.

### வங்கிக்கடன்

வங்கிக்கடன் எந்தவொரு வணிகத்திற்கும் தேவையான பணத்தினைத் திரட்டிக் கொள்ளக்கூடிய வழிமுறையொன்றாகும். வங்கி எதிர்பார்க்கும் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வணிகங்களுக்கு வங்கிக் கடன் வசதிகள் வழங்கப்படும். பொதுவாக **ஏனைய நிதியீட்டல் வழிமுறைகளை விட** குறைந்த வட்டிக்குக் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும். சிலவகை வணிக நடவடிக்கைகளில் வளர்ச்சியை ஏற்படுத்த சலுகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடன் வழங்கல் நடைபெறுகின்றது. எனவே வங்கிக் கடன், சலுகைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய பாதுகாப்பான நிதியீட்டல் முறையொன்றாகும்.

### சொத்துக்களை விற்பனை செய்தல் அல்லது வாடகைக்கு விடல் அல்லது அடகு வைத்தல்.

வணிகத்தின் சொத்துக்களைப் பயன்படுத்தி தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்ளும் நிதியீட்டல் வழிமுறை இதுவாகும். வணிகத்தில் மேலதிக சொத்துக்கள் அதாவது பயன்படுத்தாத சொத்துக்கள் இருக்கக்கூடும். இவற்றை விற்பனை செய்வதன் மூலமோ அல்லது வாடகைக்கு விடுவதன் மூலமோ அல்லது அடகு வைத்துக் கடன் பெறுவதன் மூலமோ நிதியீட்டலைச் செய்து கொள்ள முடியும். இவ்வழிமுறையில் விரைவாகப் பணத்தினைப் பெறலாம். அதேபோன்று பயன்படுத்தாத சொத்துக்களின் மூலமும் பயன் பெற முடியும்.

### தனிப்பட்ட கடன்கள்

அதிகமான சிறிய வணிகர்கள் நிதியீட்டலுக்கு முறைசாரா வழிமுறையாக தனிப்பட்ட கடன்களைப் பயன்படுத்துகின்றனர். அதிக வட்டி கொண்டதாக இருப்பினும் மிக விரைவில் கடனைப் பெறக்கூடியதாக இருப்பதும் பொதுவாகப் பிணையற்றதாய் இருப்பதும் இதன் அனுகூலங்களாகும்.

### பங்கு வழங்கல்

வணிகத்தின் மூலதனம் பங்குகளாக வகுக்கப்பட்டு அப்பங்குகளின் உரிமையை, பங்கை வாங்குபவர்களுக்கு வழங்கி தேவையான நிதியைத் திரட்டுதல் பங்குவழங்கலாகும். வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மூலதனத்தைத்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

திரட்டிக் கொள்வதற்காகப் பங்குகளை வெளியிடுகின்றன. சாதாரண பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் என பங்குகள் இருவகைப்படும்.

### சாதாரண பங்குகள்

நிலையான பங்கு இலாபம் குறிக்கப்படாது வழங்கப்படும் பங்குகள் இவையாகும்.

வருடாந்தம் பெறப்பட்ட இலாபத்தின் அடிப்படையில் இப்பங்குகளுக்கான இலாபம் தீர்மானிக்கப்படும். இச்சாதாரண பங்குகள் மூலம் திரட்டப்பட்ட அளவு பணம் வணிகம் முடிவுறும் வரையில் கம்பனியிலேயே இருக்கும்.

### முன்னுரிமைப் பங்குகள்

நிலையான பங்கு இலாபம் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடையதாக வழங்கப்படும் பங்குகள் இவையாகும்.

### சாதாரணப் பங்குகளை வழங்குவதால் வணிகமொன்றுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள்

- **அதிகளவிலான பணத்தைத் திரட்டிக்கொள்ள முடியும்.**
  குறிப்பாக வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகள் பகிரங்கமாகப் பொதுமக்க-ளுக்குப் பங்குகளை வழங்கும். இதனால் பெருமளவு பணத்தை திரட்டலாம்.

- **திரட்டப்பட்ட பணத்தை வணிகம் முடிவுறும்வரை தேக்கி வைத்துக் கொள்ள முடியும்.**
  இதனால் பணத்தை மீளச் செலுத்தும் இடர் இல்லை. பெற்ற பணத்தை வணிகம் நிலைத்து இருக்கும் வரை வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலாம்.

- **வட்டி செலுத்தும் தேவை ஏற்படாமை**
  சாதாரண பங்குகளுக்கு வட்டி செலுத்தும் செலவொன்றில்லை. இலாபம் பெறப்படும் அடிப்படையிலேயே பங்குலாப வீதம் வழங்கப்படும். இதனால் திரட்டப்பட்ட பணத்திற்காகக் கட்டாயமாகச் செலுத்த வேண்டிய செலவுகள் ஏற்படுவதில்லை.

- **வணிகம் தொடர்பாக ஒழுங்குமுறையொன்றிருத்தல்**
  பங்குகளை வாங்கி கம்பனிக்குப் பணம் வழங்கிய நபர்களுக்கு கம்பனி நிதித்தகவல்களை வழங்குவது சட்டரீதியான தேவைப்பாடாக உள்ளது. இவ்வாறு வணிகத் தகவல்களை பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டி இருப்பது நிறுவனத்தின் நன்மதிப்பை அதிகரித்து வளர்ச்சிக்கு உதவும்.

இவ்வாறு பல்வேறு நிதியீட்டல் வழிமுறைகளை மதிப்பீடு செய்வதன் மூலம் தமது வணிக அமைப்பு வகைக்கும் தமது வணிக நடவடிக்கைகளுக்கும் பொருத்தமான நிதியீட்டல் வழிமுறையைத் தெரிவு செய்யலாம்.

## 7.4 பொருத்தமான நிதியீட்டல் வழிமுறைகளைத் தெரிவுசெய்தல்

வணிக நடவடிக்கைகளின்போது பல்வேறு தேவைகளுக்காகப் பணத்தை முதலீடு செய்ய வேண்டியேற்படும். இதற்காக பல்வேறு நிதி திரட்டல் வழிமுறைகள் காணப்படுகின்றன. எனவே வணிகச் செயற்பாடொன்றை மேற்கொள்வதற்கு பொருத்தமான முறையில் பணத்தைத் திரட்டும்போது கவனிக்க வேண்டிய காரணிகள் பின்வருவனவாகும்:

1. தேவையின் தன்மை
2. பிணைகளின் தேவைப்பாடு
3. நிதி வழங்குவதற்கான நிபந்தனைகள்
4. இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் தன்மை
5. திரும்பிச் செலுத்தக்கூடிய ஆற்றல்
6. கிரயம்
7. வணிக ஒழுங்கமைப்பின் தன்மை
8. திருப்பிச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படும் காலம்
9. வணிக நடவடிக்கைகளின் தன்மை

### 1. தேவையின் தன்மை

வணிகமொன்றுக்கு எவ்விடயத்திற்காகப் பணம் தேவைப்படுகின்றது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். உதாரணமாக கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு நீண்ட கால நிதியீட்டல் வழிமுறையைத் தெரிவு செய்ய வேண்டும். ஆனால் மீள் விற்பனைக்காக பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு குறுகிய கால நிதியீட்டல் முறையைத் தெரிவு செய்ய வேண்டும்.

### 2. பிணைகளின் தேவைப்பாடு

வங்கிக் கடன் போன்ற நிறுவன ரீதியிலான கடன்களைப் பெறும் போது பிணைகளை சமர்ப்பிப்பது அவசியமாகும். வழமையாக காணி, கட்டடம், போன்ற நிலையான சொத்துக்களே பிணையாக கோரப்படுகின்றன. இவற்றை ஒப்படைப்பதற்கான ஆற்றலின் அடிப்படையில் கடனைப் பெறுதல் தீர்மானிக்கப்படும்

### 3. நிதி வழங்குவதற்கான நிபந்தனைகள்

நிறுவனங்கள் மூலம் கடனைப் பெற்றுக் கொள்ளும்போது அந்நிறுவனங்கள் விதிக்கும் நிபந்தனைகளின் அடிப்படையில் செயற்பட வேண்டியது அவசியமாகிறது. உதாரணமாக சொத்தினைப் பிணையாக வைத்துப் பெறப்பட்ட கடனை மீளச்செலுத்த முடியாதபோது அச்சொத்தினைப் பயன்படுத்த முடியாது போகும்.

### 4. இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் தன்மை

தேவைப்படும் பணத்தை சிரமமின்றிப் பெற்றுக்கொள்வதை இது குறிக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் வாய்மொழி உடன்பாட்டின் மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும், வேறு சில சந்தரப்பங்களில் பல ஆவணங்களைச் சமர்ப்பித்து, பலர் தொடர்புறுத்தப்பட்டு, கால தாமதத்துடன் பணம் பெற வேண்டியுள்ளது.

### 5. திருப்பிச் செலுத்தக்கூடிய ஆற்றல் அல்லது மீட்கும் ஆற்றல்

பெற்றுக் கொண்ட பணத்தை ஒப்புதல் அளிக்கப்பட்ட முறைக்கு அமைய மீட்க கூடிய (திரும்ப செலுத்தக் கூடிய) ஆற்றல் உள்ளதா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். குறித்த கால ஒழுங்குக்கமைய உரிய பணத்தைச் செலுத்துவதற்கு ஏற்ற வருமானம் இருக்கின்றதா? இல்லாவிடின் பணத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வேறு வழிமுறைகள் உள்ளதா? என்பதனை அறிந்து கொள்ள வேண்டும்.

### 6. கிரயம்

நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக கிரயமொன்று ஏற்படும். இது பணம் பெற்றுக்கொள்ளும் ஆரம்பச் சந்தர்ப்பத்திலிருந்து, மீளச்செலுத்தப்படும்வரை ஏற்படும். உதாரணமாக வங்கிக்கடன் பெறல், பங்கு வழங்கல் போன்ற சந்தர்ப்பங்களைக் கூறலாம். இச்சந்தர்ப்பங்களில் ஆவணம் தயாரித்தல், விளம்பரப்படுத்தல், சட்டத்தரணிக்கான கட்டணம், முத்திரைக் கட்டணம், போன்ற கிரயங்கள் ஏற்படும். எனவே, முதலீட்டினால் கிடைக்கும் பிரதிபலனுடன் நிதியீட்டக் கிரயத்தை ஒப்பிட்டு நிதியீட்ட வழிமுறை அனுகூலமானதா என தீர்மானிக்க வேண்டும்.

### 7. வணிக ஒழுங்கமைப்பின் தன்மை

எல்லா வகை வணிக அமைப்புகளும், எல்லா முறைகளிலும் பணத்தைத் திரட்ட முடியாது உதாரணமாக தனிமுயற்சி, பங்குடைமை என்பன பங்குகளை வழங்கி பணம் திரட்ட முடியாது. மேலும் வணிகம் எப்போதும் சட்டரீதியாகப் பெற்றுக்கொள்ள கூடிய நிதியீட்டல் வழிமுறைகளையே பின்பற்ற வேண்டும்.

### 8. திருப்பிச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படும் காலம்


நிதியீட்டம் மூலம் பெறப்பட்ட பணம் எவ்வளவு காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்பதை இது குறிக்கும். ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியதாகவோ அல்லது பல வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டியதாகவோ நிதியீட்டங்கள் அமையலாம். காலம் நீண்டதாயின் திருப்பிச் செலுத்தும் தவணைக் கட்டணத் தொகை சிறியதாக இருக்கும்.

காலம் குறைவாக இருப்பின் தவணைக் கட்டணத்தொகை பெரியதாக இருக்கும். இச்சந்தர்ப்பத்தில் தவணைக் கட்டணத்தைத் திருப்பிச் செலுத்தக் கூடிய வருமானம் இல்லாவிடின் வணிகம் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும்.

## 9. வணிக நடவடிக்கைகளின் தன்மை

தமது வணிக நடவடிக்கைகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு, நிதியீட்டல் வழிமுறையைக் கவனத்திற் கொள்வது முக்கியமாகும். உதாரணமாக சிறிய சில்லறை வணிகத்தை ஆரம்பிக்கும் ஒருவரும், நகரப்பகுதியில் நவீன பல்பொருள் சந்தையை ஆரம்பிக்கும் ஒருவரும் பின்பற்றும் நிதியீட்டல் வழிமுறை வேறுபட்டதாக அமையும்.

இவ்வாறு ஒவ்வொரு நிதியீட்டல் வழிமுறை பற்றியும் ஆய்ந்தறிந்து, தமது வணிகத்தின் தன்மைக்கேற்ப மிகவும் பொருத்தமான நிதியீட்டல் முறையொன்றைத் தெரிவுசெய்து கொள்வதன் மூலம், வணிகத்தின் செயற்றிறனை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.



**செயற்பாடு 02**

வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் நிதியீட்டல் வழிமுறைகள், ஏனைய வணிக அமைப்புக்களையும் விட விரிவானதாகும். உங்கள் கருத்தை எடுத்துக் கூறுங்கள்.



**செயற்பாடு 03**

'வரையறுக்கப்பட்ட கம்பனிகள் பங்குகளை வழங்குவதன் மூலம் நிதியைத் திரட்டிக் கொள்வதற்கு அதிக விருப்பைக் காட்டுகின்றன.'
இக்கூற்றுத் தொடர்பாக உங்கள் கருத்தை முன்வையுங்கள்.



**செயற்பாடு 04**

'நிதியீட்டல் வழிமுறையொன்றைத் தெரிவுசெய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள்' எனும் தலைப்பில் உங்கள் பாடசாலையின் வணிகமன்ற சஞ்சிகைக்கு ஆக்கமொன்றைத் தயாரியுங்கள்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## 7.5 முதலீட்டு வழிமுறைகளை மதிப்பீடு செய்தல்

வணிக சூழலானது மிக விரைவாக மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதால் முதலீட்டுச் சந்தர்ப்பங்களும் விரிவடைந்துள்ளன. தனி நபர்களினதும், நிறுவனங்களினதும் மேலதிக பணத்தினை வருமானம் கிடைக்கும் வழிமுறைகளில் ஈடுபடுத்துதல் முதலீடு என எளிமையாகக் குறிப்பிடலாம். பணத்தினை முதலீட்டில் ஈடுபடுத்தக் கூடிய காலத்தின் அடிப்படையில் முதலீட்டு வழிமுறைகளை இருவகைப்படுத்த முடியும்.

1. குறுங்கால முதலீட்டு வழிமுறைகள்
2. நீண்டகால முதலீட்டு வழிமுறைகள்

பொதுவாக ஒரு வருடத்திற்குக் குறைந்த காலப் பகுதிக்கு ஈடுபடுத்தப்படும் முதலீடுகளே குறுங்கால முதலீடு எனப்படுகிறது. மாறாக ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு ஈடுபடுத்தப்படும் முதலீடு நீண்ட கால முதலீடு எனப்படும். மேலும் முதலீட்டின் சட்டரீதியான தன்மையை அடிப்படையாக கொண்டு இரு வகைப்படுத்த முடியும்.

1. முறைசார் முதலீட்டு வழிமுறைகள்.
2. முறைசாரா முதலீட்டு வழிமுறைகள்

இங்கு நாம் முறைசார் முதலீட்டு வழிமுறை பற்றிக் கவனம் செலுத்துவோம். ஆனால் முறைசாரா முதலீட்டு வழிமுறைகளும் சமூகத்தில் காணப்படுகின்றன. தெளிவான சட்டரீதியிலான அடிப்படைகளைக் கொண்டிராது முறைமையற்ற தன்மையில் நடைபெறும் முதலீடுகள் முறைசாரா முதலீட்டு வழிமுறைகள் எனப்படும் இதற்கு சீட்டுப் போடுதல், பணத்தைக் கடனுக்கு வழங்குதல் போன்றன உதாரணங்களாகும். சட்டரீதியற்ற தன்மை, சட்டப் பாதுகாப்பு இன்மை என்பன முறைசாரா முதலீட்டு வழிமுறையின் பிரதிகூலங்களாகும். சட்ட அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட தன்மையைக் கொண்டிருக்கும் முதலீடுகளே முறைசார் முதலீட்டு வழிமுறைகளாகும். முறைசார் முதலீட்டு வழி முறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதலீட்டு வழிமுறையாக இருப்பதற்கான காரணங்கள் பின்வருமாறு

1. அங்கீகரிக்கப்பட்ட சட்டப் பின்னணி காணப்படல்.
2. முதலீடுகளிற்குக் கிடைக்கும் பாதுகாப்புத்தன்மை.
3. முதலீட்டின் மூலம் கிடைக்கும் நிலையான அனுகூலங்கள்.
4. மேலதிக அனுகூலங்களை முதலீட்டின் மூலம் பெற கூடியதாக இருத்தல்.

இப்பொழுது நாங்கள் சில முதலீட்டு வழிமுறைகளில் கவனத்தைச் செலுத்துவோம்.

- ♦ வைப்புகளை ஆரம்பித்தல்
- ♦ சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்
- ♦ பங்குகளை வாங்குதல்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## வைப்புக்களை ஆரம்பித்தல்

வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களின் வேறுபட்ட கணக்குகளில் பணத்தை வைப்புச் செய்தல் முதலீட்டு வழிமுறையொன்றாகும். இது பரவலாக எல்லாத் தரப்பினரும் மேற்கொள்ளும் முதலீட்டு வழிமுறையாகும். வங்கிகளும் நிதி நிறுவனங்களும் முதலீடுகளை ஈர்த்துக் கொள்வதற்காக பல்வேறு வைப்பு வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. முதலீட்டுக்கான வைப்பு வகைகள் பின்வருமாறு

1. சேமிப்பு வைப்புகள்
2. கால வைப்புகள் (நிலையான வைப்புகள்)
3. வைப்புச் சான்றிதழ்கள்

## சேமிப்பு வைப்புகள்

வட்டியை வருமானமாகப் பெறும் எதிர்பார்ப்பின் அடிப்படையில் சிறிய பணத்தொகையாக இருப்பினும் வைப்புச் செய்யக் கூடிய கணக்கு சேமிப்பு வைப்பு எனப்படும். தேவையான சந்தர்ப்பத்தில் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பது இவ்வைப்பின் விஷேட பண்பாகும். சேமிப்பு வைப்புக்களை எளிய முதலீட்டு வழிமுறையொன்றாக எடுத்துக் காட்ட பின்வரும் காரணங்களை குறிப்பிடலாம்.

★ ஆரம்பிப்பது இலகு.

★ தேவையான சந்தர்ப்பத்தில் ஒரு சிறிய தெகையாக இருப்பினும் வைப்புச் செய்ய முடிதல்.

★ பணத்தை முதலீடு செய்வதற்கான நிலைய வசதிகள் கொண்டதாக இருத்தல்.

  உதாரணம்:-
  - அஞ்சலகம்
  - பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களும், பாடசாலை வங்கிகளும்.
  - கிராமிய கூட்டுறவு வங்கி
  - வணிக வங்கிகள்
  - வங்கியல்லாத ஏனைய நிதி நிறுவனங்கள்

★ வைப்பிலிடப்பட்ட பணத்தை தேவையான போது மீளப் பெறக் கூடியதாக இருத்தல்.

## நிலையான வைப்புக்கள் (கால வைப்புக்கள்)

குறித்தவொரு பணத்தொகையினை குறித்தவொரு காலத்திற்கு குறித்தவொரு வட்டி வீதத்தின் அடிப்படையில் வைப்பாக இடும் கணக்கு நிலையான வைப்பு எனப்படும். ஒப்பந்த காலத்திற்கு முன் இவ்வைப்புக்களிலிருந்து பணத்தினை மீளப் பெறுவதாயின் குறித்த வட்டி கிடைக்காது. வைப்பாளர்கள் விரும்பியவாறு வட்டியை மாதாந்தமோ அல்லது காலாண்டு அடிப்படையிலோ அல்லது குறித்த தவணை முடிந்த பின்போ பெற்றுக்கொள்ள முடியும். சாதாரண சேமிப்பு வைப்புக் கணக்குகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதத்தை விடக் கூடிய வட்டி வீதம்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

கிடைப்பதோடு வைப்புக்களின் தவணை வரையறைக்கேற்ப (கால அளவு) வட்டி வீதம் மாற்றமடையும். நிலையான வைப்பொன்றில் பணத்தினை முதலீடு செய்வதனால் பின்வரும் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- வாடிக்கையாளர் இவ்வைப்பைப் பிணையாக காட்டி வங்கிக் கடன் பெறலாம்.
- சேமிப்பு வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதத்தை விடக் கூடிய வட்டி வீதத்தைப் பெறக்கூடியதாக இருத்தல்.
- வைப்புக்களின் தவணைக்காலம் அதிகரிக்கும்பொழுது அதிக வட்டிவீதத்தைப் பெறக்கூடியதாக இருத்தல்.




**பல்வேறு முதலீட்டு முறைகள்**

### வைப்புச் சான்றிதழ்

குறித்த பணத்தொகையை குறித்த காலத்திற்கு வட்டியுடன் சேமிக்கக்கூடிய வைப்பாளரின் பெயர் குறிக்கப்படாத கைமாற்றத்தக்க சாதனம் சேமிப்புச் சான்றிதழாகும். முதலீட்டாளரின் பெயர் குறிப்பிடப்படாதிருப்பதே இச்சான்றிதழின் முக்கிய பண்பாகும். முதலீட்டாளர் இச்சான்றிதழை வேறு தரப்பினருக்கும் கைமாற்ற முடியும். இச்சான்றிதழில் முதலிடும்போது முகப் பெறுமதியில் இருந்து வட்டி கழிக்கப்பட்ட தொகையை செலுத்திப் பெற்றுக் கொள்ள முடிவது முக்கிய அனுகூலமாகும்.

தனிநபர்களின் மற்றும் நிறுவனங்களின் தமது முதலீட்டினைப் பாதுகாக்க, அவர்கள் வைப்புக்களைச் செய்யும் நிறுவனம் இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும், வங்கிச் சட்டத்தின் கீழ் அல்லது நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.



**செயற்பாடு 05**

உங்களது பாடசாலையில் சேமிப்பு வங்கியொன்று உண்டெனில் அதன் நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்து பின்வரும் வினாக்களுக்கான விடையைக் கண்டறியுங்கள்.

(i) ஆரம்பிக்கக்கூடிய வைப்பு வகைகள் யாவை?
(ii) அவ்வங்கியில் வைப்புகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஆகக் குறைந்த பணத்தொகை எவ்வளவு?
(iii) வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதங்கள் எவ்வளவு?
(iv) அப்பணத்தினை வைப்புச் செய்வதற்கான படிமுறைகளைக் குறிப்பிடுக.
(v) மாணவர்கள் மூலம் வைப்புச் செய்யப்பட்ட பணத்தினை எவ்வாறு மீளப் பெற்றுக் கொள்ள முடியும்?
(vi) வைப்புப் பணத்துடன் மேலதிகமாக வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் யாவை?

### சொத்துக்களில் முதலீடு செய்தல் (சொத்துக்களை உரிமைப்படுத்திக் கொள்ளல்)

தமது பணத்தைச் சொத்துக்களில் முதலீடு செய்வது வழமையான நடைமுறை யாகும். பணத்தின் பெறுமதி வீழ்ச்சி அடையும் போக்கானது சொத்துக்களில் முதலீடு செய்வதைத் தூண்டி உள்ளது. (சொத்துக்களை உரிமைப்படுத்திக் கொள்ளல்)

சொத்துக்களில் முதலீடு செய்தல் பின்வரும் இருவகைப்படும்.

- அசையாச் சொத்துக்களில் முதலீடு செய்தல்
- அசையும் சொத்துக்களில் முதலீடு செய்தல்

## அசையாச் சொத்துக்களில் முதலீடு செய்தல்

வங்கிகளில் அல்லது நிதி நிறுவனங்களில் குறித்த பணத்தொகையை குறித்த காலத்திற்கு குறித்த வட்டியுடன் முதலீடு செய்ய பயன்படும் சாதனம் வைப்புச் சான்றிதழ் ஆகும்.

சாதாரண சேமிப்புக்களையும் விட கூடிய வட்டி வீதம் வழங்கப்படல், பெரும்பாலும் ஒரு வருடத்தை வைப்புக் காலமாக கொண்டிருத்தல், பரிசுககுலுக்கல்கள் போன்ற வெகுமதிகள் கிடைத்தல் போன்ற அனுகூலங்கள் மற்றும் பண்புகளை வைப்புச் சான்றிதழ் கொண்டிருக்கும்.

காணிகளில் முதலீடு செய்வதில் அக்கறை செலுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் சில பின்வருமாறு

- ஒரு நாட்டில் காணப்படும் காணியின் அளவு
- காணிகளுக்கு வரையறுத்த நிரம்பல் காணப்படுதல்
- காணிகளுக்கான கேள்வி அதிகரிப்பு
- காணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

## அசையும் சொத்துக்களில் முதலீடு செய்தல்

இடத்துக்கிடம் எடுத்துச் செல்லக்கூடிய சொத்துக்கள் அசையும் சொத்துக்கள் எனப்படும். முதலீட்டு வழிமுறை எனும் வகையில் பெரும்பாலான தரப்பினர் வழமையாக அசையும் சொத்துக்களில் முதலீடு செய்கின்றனர். இதற்கு உதாரணமாக வாகனங்களைக் கொள்வனவு செய்தல் இரத்தினக்கற்கள், தங்க ஆபரணங்கள் போன்ற பெறுமதியான வளங்களை உரிமைப்படுத்திக் கொள்ளல், பழமையான அரும்பொருட்களை உரிமைப்படுத்திக் கொள்ளல் போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

இவற்றுள் தங்க ஆபரணங்களில் முதலீடு செய்வதில் அதிகமானோர் ஈடுபட்டிருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கான காரணங்கள் வருமாறு

- தொடர்ந்து திறந்த சந்தையில் தங்க விலைகளில் அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படல்.
- கூடிய திரவத் தன்மை கொண்டது.

## பங்குகளில் முதலிடல்

கம்பனிகளால் வெளியிடப்படும் பங்குகளை வாங்குதல் பணத்தை முதலீடு செய்யக்கூடிய மற்றுமொரு முறைசார் முதலீட்டு வழிமுறையாகும். பங்குச் சந்தையின் மூலம் பங்குகளைக் கொள்வனவு செய்ய முடியும். அதாவது வரையறுக்கப்பட்ட கம்பனிகள் பங்குகளை வெளியிடும்போதோ அல்லது பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் அவற்றை மீளவிற்கும்போதோ பங்குகளை வாங்கலாம்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்குகளை முதலீட்டாளர் விலைக்கு வாங்கவும் விற்கவும் கூடிய இடம் பங்குச் சந்தையாகும். இலங்கையில் இக்கொடுக்கல் வாங்கல்கள் (பங்குச் சந்தை நடவடிக்கைகள்) கொழும்புப் பங்கு பரிவர்த்தனை நிலையம் (Colombo Stock Exchange) ஊடாகவே நடைபெறுகிறது. பங்குச் சந்தையில் பங்குகளை விற்பனை செய்வதற்காகப் பதிவு செய்யப்பட்ட கம்பனியே பட்டியல்படுத்தப்பட்ட கம்பனி என அழைக்கப்படு-கிறது. இலங்கை பிணைகள் ஆணைக்குழு பங்குச் சந்தைக் கருமங்களை மேற்பார்வை செய்கின்றது.

முதலீட்டாளர் தமது பணத்தை பங்குச் சந்தையினூடாக பட்டியல் படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்ய முடியும். அக்கம்பனிகளினால் விநியோகிக்கப்படும் பங்குகளில்

★ சாதாரண பங்குகள்

★ முன்னுரிமைப் பங்குகள்

என்பன பிரதானமான வகைகளாகும். இங்கு கூடுதலாக பரிமாற்றத்திற்கு உட்படுவதனாலேயே முதலீட்டு வழிமுறையாக சாதாரண பங்குகளில் கவனம் செலுத்தப்படுகிறது.

### சாதாரண பங்குகள்

வரையறுக்கப்பட்ட கம்பனிகள் சாதாரண பங்குகளை வெளியீடு செய்வதைக் காண முடியும். இப்பங்குகளில் காணப்படும் முக்கியமான பண்புகள் சில பின்வருமாறு:-

- **இலாபப் பங்கு வழங்கல்**

  கம்பனியினால் ஈட்டப்படும் இலாபத்தின் அடிப்படையிலே இலாபப் பகிர்வு (பங்கு இலாபம்) தீர்மானிக்கப்படும். இலாபம் உழைக்காத சந்தர்ப்பங்களில் இலாபப் பகிர்வு பிரகடனப்படுத்தாது இருப்பதுடன் கூடிய இலாபம் இருக்கும் சந்தர்ப்பங்களில் கூடிய இலாபப் பகிர்வினை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களும் இருக்கின்றன.

- **கம்பனியின் நிர்வாகத்தில் பங்குபற்றுவதற்கான அதிகாரம்**

  கம்பனியின் நிர்வாகத்தில் பங்குபற்றுவதற்கான அதிகாரம் கிடைக்கின்றது. கம்பனியொன்று பங்குதாரர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் குழு மூலமே முகாமைத்துவக் கருமங்களை மேற்கொள்கின்றது. சாதாரண பங்குரிமையாளருக்கே இயக்குனராவதற்குரிய தகுதி கிடைக்கின்றது.

- **வாக்களிக்கும் உரிமை**

  கம்பனியின் கூட்டங்களில் தீர்மானங்களுக்கு வரும்பொழுது வாக்குரிமை-யைச் செலுத்துவதற்கான உரிமை கிடைக்கின்றது.

- **உரிமை மூலதனம்**

  வரையறுக்கப்பட்ட கம்பனியின் சாதாரண பங்கு மூலதனம் உரிமையாளர்-களின் மூலதனம் எனக் கருதப்படும்.

## முதலீட்டுக் கலவை

முதலீட்டாளர்கள் குறித்த ஒரு காலப்பகுதியில் பல்வேறு முதலீட்டு வழிமுறைகளில் ஈடுபட முடியும். இது முதலீட்டுக் கலவை எனப்படும். அதாவது வங்கியில் வைப்புச் செய்தல், கம்பனிகளின் பங்குகளை வாங்குதல் என்பனவற்றினை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு நட்ட அச்சம் குறைவதோடு வருமானத்தைப் பெறுவதில் உறுதியற்ற தன்மையைக் குறைத்துக் கொள்ள முடியும். முதலீட்டாளரொருவரின் முதலீட்டை பல்வேறு வழிமுறைகளில் ஈடுபடுத்தக் கூடிய வசதியை வழங்கும் நிறுவனங்கள் உள்ளன.

உதாரணமாக அலகுப் பொறுப்பைக் கூறலாம்.

## அலகுப் பொறுப்பு

அலகுப் பொறுப்பு என்பது முதலீட்டாளர்களுக்கு அலகுகளை விற்பதன் மூலம் சேகரிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட திரண்ட நிதியாகும். இந்நிதியம் முதலீடுகள் தொடர்பாக விசேட திறமை கொண்ட தொழில்சார் தகைமை கொண்ட முகாமையாளர் மூலம் முகாமை செய்யப்படுகின்றது. இதன் மூலம சிறிய முதலீட்டாளர்களுக்கும் பாரிய முதலீட்டு வழிமுறைகளில் முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதும், சிறந்த ஒரு முதலீட்டு கலவையில் முதலிட சந்தர்ப்பம் கிடைப்பதும் நட்ட அச்சம் குறைவாக இருப்பதும் முக்கிய அனுகூலங்கள் ஆகும். இதற்கமைய அலகுப் பொறுப்புக்களில் அலகுகளைக் கொள்வனவு செய்வதும் சிறந்த முதலீட்டு வழிமுறையொன்றாகும்.

## 7.6 பல்வேறு முதலீட்டு வழிமுறைகளின் அனுகூலங்கள்

நாம் இதுவரை பல்வேறு முதலீட்டு வழிமுறைகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம். அடுத்து முதலீட்டு வழிமுறைகளினால் எவ்வாறான அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமெனப் பார்ப்போம்.

### வைப்புக்கள்

வங்கிகளில் வைப்புச் செய்வதன் மூலம் முதலீட்டாளர்கள் பின்வரும் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- **வட்டி**

முதலீட்டாளரொருவர் தனது பணத்தினை வைப்புச் செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளும் வருமானத்தை வட்டி என்றழைக்கின்றோம். வங்கிகளும் மற்றும் நிதி நிறுவனங்களும் வைப்பாளர்களின் முதலீடுகளை ஈர்த்துக் கொள்வதற்காக வேறுபட்ட வைப்புகளுக்கு வேறுபட்ட வீதங்களினடிப்படையில் வட்டியை வழங்குகின்றன.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

- **பாதுகாப்புத் தன்மை**

முதலீடு செய்த பணத்தினைப் பாதுகாப்பாக மீளப் பெற்றுக் கொள்ளல் மற்றும் முதலீட்டு வருமானங்களைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளல் என்பவற்றில் நம்பகத் தன்மையைக் கொண்டிருத்தல் பாதுகாப்புத் தன்மை எனப்படும்

இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படும் வங்கிச் சட்டத்தின் அல்லது நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் முதலீடு செய்வது பாதுகாப்பானது.

- **ஏனைய அனுகூலங்கள்**

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் வைப்புக்களை அதிகரிக்க பல்வேறு அனுகூலங்களை வழங்குகின்றன.

உதாரணம் : அதிர்ஷ்ட இலாபச் சீட்டு (லொத்தர்)
காப்புறுதி வசதி அளித்தல்
கடன்பெறும்போது வைப்பைப் பிணையாக ஏற்றல் போன்றவை

## சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்

இம்முதலீட்டு வழிமுறையினூடாக கிடைக்கும் அனுகூலங்கள் சிலவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

★ **மூலதன இலாபம் கிடைத்தல்**

சொத்தொன்றை உரிமைப்படுத்திக் கொள்வதற்கு கொடுக்கப்பட்ட பணத்தொகையினை விட கூடிய பணத்தொகைக்கு விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற இலாபம் மூலதன இலாபம் என்றழைக்கப்படும்.

**உதாரணம்** :- ரூபா 800 000 த்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட காணியொன்றை ரூபா 850 000 த்திற்கு விற்பனை செய்வதன் மூலம் ரூபா 50 000 மூலதன இலாபமாகக் கிடைக்கும்.

★ **உரிமை படுத்திக் கொண்ட சொத்துக்கள் மூலம் வருமானம் கிடைத்தல்**

உதாரணம் :-

- வீட்டுடன் ஒரு காணியை வாங்குவதால், வாடகை வருமானத்தைப் பெறலாம்
- காணியிலுள்ள வளங்களால் (நீர், கனிப்பொருட்கள், விவசாய விளைப்பொருட்கள்) வருமானம் பெறலாம்.

★ **பிணை எனும் வகையில் சமர்ப்பிக்க முடியும்.**

நிறுவனங்களிலிருந்து கடன் பெறும்பொழுது பெரும்பாலும் பிணைப் பாதுகாப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சொத்துக்களைப் பிணைப் பாதுகாப்பாகச் சமர்ப்பிக்க முடியும்.

## பங்குகளில் முதலீடு செய்தல்

வரையறுத்த கம்பனிகளின் சாதாரண பங்குகளில் பணத்தை முதலீடு செய்த பிரிவினர் பல்வேறு அனுகூலங்களை அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு

★ **இலாபப் பங்கு (பங்கு இலாபம்)**

கம்பனி உழைக்கும் தேறிய இலாபத்தில் பங்குரிமையாளருக்குப் பிரித்து வழங்கப்படுகின்ற வருமானம் இலாபப்பங்கு என அழைக்கப்படும். முதலீடு செய்யப்பட்ட பங்குகளின் அளவின் அடிப்படையில் பங்கு இலாபம் வழங்கப்படும். நிதியாண்டு இறுதியில் இலாபப்பங்கு பிரகடனப்படுத்தப்படும். சில கம்பனிகள் நிதியாண்டு மத்தியில் இலாபப் பங்கு எனும் வகையில் குறிப்பிட்டளவு தொகையை பங்குதாரர்களுக்கு வழங்கும். இது இடைக்கால பங்கு இலாபம் எனப்படும். கம்பனி கூடிய இலாபம் உழைக்கும் சந்தர்ப்பங்களின்போது பங்குதாரர்களுக்குக் கூடிய பங்கிலாபத் தொகை கிடைக்கும்.

★ **மூலதன இலாபம்**

பங்குகளைக் கொள்வனவு செய்த முதலீட்டாளர்கள் அவற்றை வாங்கிய விலையை விடக் கூடிய விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் அனுகூலம் மூலதன இலாபம் என்றழைக்கப்படும்.

உதாரணம்

முதலீட்டாளர் ஒருவர் கம்பனியொன்றில் 800 பங்குகளை ரூபா 12 வீதம் கொள்வனவு செய்து ரூபா 16 வீதம் விற்பனை செய்வாராயின் அவருக்குக் கிடைக்கின்ற மூலதன இலாபம் (16-12) x 800 = ரூபா 3 200 ஆகும்.

★ **உபகாரப் பங்கிற்கு உரித்தாதல்**

சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்த முதலீட்டாளர்களுக்கு எவ்வித பணமும் அறவிடாது ஏதேனுமொரு வீதத்தின் அடிப்படையில் அக்கம்பனி பங்குகளை வழங்குதலை உபகாரப் பங்கு வழங்கல் எனலாம். இவ்வாறு சாதாரண பங்குரிமையாளருக்குப் பணம் செலுத்தாது பங்குகள் கிடைக்கின்றன.

**★ உரித்து வழங்குதல் அல்லது உரிமை வழங்கல்**

கம்பனி பங்குகளை விநியோகிக்கும் சந்தர்ப்பத்தில் அப்பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை முன்னுரிமை அடிப்படையில் ஏற்கனவே கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்துள்ள முதலீட்டாளர்களுக்கே கொடுத்தல் உரித்து வழங்கல் எனப்படும். இச்சந்தர்ப்பத்தில் பங்குச் சந்தையில் காணப்படும் விலையினை விட குறைந்த விலைக்குப் பங்குகளைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம் பங்காளர்களுக்குக் கிடைக்கின்றது.

**★ விரைவாகப் பணவடிவில் மாற்றுவதற்கான இயலுமை (திரவத்தன்மை)**

முதலீட்டாளரினால் கொள்வனவு செய்யப்பட்ட சாதாரணப் பங்குகளை தமக்குப் பணம் தேவைப்படும் சந்தர்ப்பங்களின்போது பங்குச்சந்தையில் விற்பனை செய்து பணமாக மாற்றலாம்.

**★ பிணைப்பாதுகாப்பு எனும் வகையில் சமர்ப்பிக்க முடியும்**

நிறுவனங்களிலிருந்து கடன் பெறும்பொழுது சாதாரண பங்குகளில் முதலீடு செய்த பங்குப் பத்திரத்தினைப் பிணைப் பாதுகாப்பாக சமர்ப்பிக்க முடியும்.

**★ ஏனைய அனுகூலங்கள்**

மேற்குறிப்பிட்ட அனுகூலங்களுக்கு மேலாக பங்குரிமையாளர்களினால் பெற்றுக் கொள்ளும் வேறு அனுகூலங்களும் காணப்படுகின்றன.

உதாரணம் :

- இயக்குநர் குழுவில் ஒருவராகப் பதவி வகிப்பதற்கு இயலுமை இருத்தல்.
- தீர்மானங்கள் எடுக்கும்பொழுது தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமை இருத்தல்.
- நிறுவனத்திலிருந்து பண்டங்களைக் கொள்வனவு செய்யும்போது பங்குதாரருக்கு விசேட கழிவுகள் வழங்கப்படுதல்.

## 7.7 முதலீட்டுத் தீர்மானமொன்றைத் தெரிவு செய்யும்பொழுது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்

முதலீட்டாளர் ஒருவர் தனது பணத்தை முதலீடு செய்யும்பொழுது, அனுகூலங்க-ளையும், தோன்றக்கூடிய நட்ட அச்சங்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

### அனுகூலங்கள்

முதலீடு செய்தவர்களுக்கு நிதிசார் அல்லது நிதிசாராத முறைகளில் கிடைக்கின்ற அனுகூலங்களின் தொகுதியே இதுவாகும். அனைத்து முதலீட்டாளரும் கவர்ச்சிகரமான அனுகூலங்களைப் பெறும் எதிர்பார்ப்புடனேயே தமது பணத்தை

முதலீடு செய்கின்றனர். குறித்த முதலீட்டின் மூலம் கிடைக்கின்ற அனுகூலங்களில் திருப்தி அடையாவிடின் தமது பணத்தை வேறு மாற்று முதலீட்டு வழிமுறைகளில் ஈடுபடுத்த முயற்சிப்பர்.

## நட்ட அச்சம் அல்லது இடர்

முதலீடு செய்யப்படுகின்ற தனது வளத்தினை மீண்டும் திருப்பிப் பெற்றுக் கொள்வதற்கு முதலீட்டாளர்களுக்கு உரிமையுண்டு. அவற்றை மீண்டும் பெற்றுக் கொள்வது தொடர்பாகப் நடைமுறைப் பிரச்சினைகள் காணப்படலாம் தேவையின் போது முதலீடு செய்யப்பட்ட வளங்களை மிக இலகுவாக மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் காணப்பட வேண்டும். இல்லாதுவிடின் முதலீடு தொடர்பாக நட்ட அச்சம் காணப்படுகின்றது எனக் கருத வேண்டும்.

முதலீடு செய்யும் பணத்திற்குக் குறிப்பிட்ட வருமானம் தொடர்ந்து பெற்றுக் கொள்ளலில் உறுதியான தன்மை காணப்பட வேண்டும். ஒப்பந்தத்தின் (குறித்த முதலீட்டு) அடிப்படையில் குறிப்பிட்ட வருமானம் குறித்த காலப் பகுதியினுள் கிடைக்க வேண்டும். இல்லாதுவிடின் நட்ட அச்சம் காணப்படுகின்றது எனக் கருத வேண்டும்.

முதலீடொன்றில் அனுகூலத்திற்கும் நட்ட அச்சத்திற்குமிடையில் உள்ள தொடர்புகளைப் பின்வரும் முறையில் காட்டலாம்.

| விபரம் | அனுகூலம் | நட்ட அச்சம் |
|---|---|---|
| **முதலீடு 1** | கூடியது | கூடியது |
| **முதலீடு 2** | குறைவு | குறைவு |

இவ்வட்டவணை, அனுகூலம் கூடிய முதலீட்டு வழிமுறையொன்றில் கூடிய நட்ட அச்சம் காணப்படுகின்றது எனவும் மாறாக குறைந்தளவில் நட்ட அச்சம் காணப்படும் முதலீடொன்றில் அனுகூலங்களும் குறைவாகவே காணப்படுகின்றன. எனவும் காட்டுகிறது.

எனினும் முதலீட்டுத் தீர்மானமானது தனிநபர் மனப்பாங்கிற்கேற்ப பல்வகையாக அமையலாம். இதற்கான காரணங்கள்:-

- முதலீடு தொடர்பாக நபர்களிடமுள்ள அறிவு
- நட்ட அச்சத்தை ஏற்பதற்கு நபர்களிடம் காணப்படும் விருப்பம்
- பொருளாதார, சமூக, அரசியல் நிலைமைகள்

- முயற்சியாண்மைத் திறன்
- முதலீட்டு அனுகூலத்திற்கான தேவை
- கிடைக்கக் கூடிய பொருத்தமான முதலீட்டு வாய்ப்புகள்.

பல்வேறு காரணிகளைக் கருத்திற் கொண்டு பணமுதலீடு பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது தற்பொழுது உங்களுக்குத் தெளிவாகி இருக்கும். அறிவுபூர்வமான தீர்மானம் மூலம் நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.



### செயற்பாடு 06

'கூடிய அனுகூலங்களை எதிர்பார்த்து முறைசாரா வழிமுறையொன்றில் முதலிடுவது நட்ட அச்சம் உடையதாகும்.' எனும் தலைப்பின்கீழ் ஆக்கம் ஒன்றைத் தயாரித்து, பாடசாலைக் காலைக் கூட்டத்தில் சமர்ப்பியுங்கள்.



### செயற்பாடு 07

"முதலீட்டுக் கலவை" முதலீட்டாளர்களின் நட்ட அச்சத்தைக் குறைப்பதற்கும் அனுகூலங்களை அதிகரிப்பதற்கும் ஏதுவாகலாம். இவ்விடயம் தொடர்பாக உங்கள் நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்



### செயற்பாடு 08

'முதலீட்டைப் பரவலாக்குதல் மூலம் பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்தலாம்.' இக்கூற்றுக்குச் சார்பான விடயங்களை முன்வையுங்கள்.



### செயற்பாடு 09

தற்போது இலங்கையில் காணப்படும் குறுங்கால, நீண்டகால முதலீட்டு வழிமுறைகள் பற்றி உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடி, அறிக்கையொன்-றைத் தயாரியுங்கள். அவ்வறிக்கையைப் பாடசாலையின் சுவர்ப் பத்திரிகையில் காட்சிப்படுத்துங்கள்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

| தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் | பாடஉள்ளடக்கம் |
|---|---|
| **5.0 கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு முதன்மை ஏடுகளைப் பேணுவார்.** | |
| 5.4 கழிவுகளுடன் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு மூன்று நிரல் காசேட்டினைப் பேணுவார். | • மூன்று நிரல் காசேட்டின் மாதிரி அமைப்பு<br>• மூல ஆவணங்கள்<br>• கொடுக்கல் வாங்கல்களின் வகைகள்<br>• காசு<br>• காசோலை<br>• காசுக்கழிவு<br>  • கொடுத்த கழிவு<br>  • பெற்ற கழிவு<br>• காசு மீதி<br>• வங்கி மீதி<br>• பேரேட்டுப் பதிவுகள் |
| 5.5 சிறு செலவுகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு சில்லறைக் காசேட்டினைப் பேணுவார் | • சில்லறைக் காசேட்டின் முக்கியத்துவம்<br>• சில்லறைக் காசுக் கொடுக்கல் வாங்கல்கள்<br>• சில்லறைக் காசுக் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்படுகின்ற மூல ஆவணங்கள்<br>• சில்லறைக் காசு வசக்கட்டு<br>• சில்லறைக் காசேட்டின் மாதிரி அமைப்பு<br>• பதிவு செய்யும் ஒழுங்கு முறை<br>  • பிரதம காசாளரிடம் வசக்கட்டினைப் பெறல்.<br>  • சில்லறைக் காசுக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்.<br>  • சில்லறைக் காசேட்டின் மீதியினைக் கணிப்பிடல்.<br>  • வசக்கட்டினை மீள நிரப்பல்<br>  • பகுப்பாய்வு நிரல்களைக் கூட்டுதல்.<br>  • பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றுதல். |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

| தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் | பாடஉள்ளடக்கம் |
|---|---|
| 5.6 வியாபாரப் பண்டங்களைக் கட-னுக்கு கொள்வனவு செய்வது சம்பந்தமான தகவல்களைப் பேணுவார். | • கொள்வனவு நாளேடு<br>• மாதிரி அமைப்பு<br>• மூல ஆவணங்கள்<br>• பதிவு செய்யும் ஒழுங்குமுறைகள்<br>• பேரேட்டுப் பதிவுகள்<br>• கொள்வனவுக் கணக்கு<br>• கடன் கொடுத்தோர் கணக்கு<br>• வெளித் திரும்பல் நாளேடு<br>• பொருட்களை வெளித்திரும்பல் செய்வதற்கான காரணங்கள்<br>• மாதிரி அமைப்பு<br>• மூல ஆவணங்கள்<br>• பதிவு செய்யும் ஒழுங்குமுறைகள்<br>• பேரேட்டுப் பதிவுகள்<br>• வெளித்திரும்பல் கணக்கு<br>• கடன்கொடுத்தோர் கணக்கு |
| 5.7 வியாபாரப் பண்டங்களைக் கடனுக்கு விற்பனை செய்தல் தொடர்பான தகவல்களைப் பேணுவார் | • விற்பனை நாளேடு<br>• மாதிரி அமைப்பு<br>• மூல ஆவணங்கள்<br>• பதிவு செய்யும் ஒழுங்குமுறைகள்<br>• பேரேட்டுப் பதிவுகள்<br>• விற்பனைக் கணக்கு<br>• கடன்பட்டோர் கணக்கு<br>• உட்திரும்பல் நாளேடு<br>• மாதிரி அமைப்பு<br>• மூல ஆவணங்கள்<br>• பதிவு செய்யும் ஒழுங்குமுறைகள்<br>• பேரேட்டுப் பதிவுகள்<br>• உட்திரும்பல் கணக்கு<br>• கடன்பட்டோர் கணக்கு |
| 5.8 பொதுக் குறிப்பேட்டினைப் பேணுவார். | • மாதிரி அமைப்பு<br>• மூல ஆவணங்கள்<br>• பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் களின் வகைகள்<br>• தொடக்கப் பதிவுகள்<br>• நிலையான சொத்துக்களின் கடன் கொள்வனவுகளும் கடன் விற்பனையும்.<br>• செம்மையாக்கல்கள்<br>• வழுக்களைத் திருத்துதல் |

| தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் | பாடஉள்ளடக்கம் |
|---|---|
| 5.9 பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்தி பரீட்சைமீதியினைத் தயாரிப்பார். | • பேரேடுகள்<br>• பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்தல்.<br>  • சொத்து<br>  • செலவு<br>  • பொறுப்பு<br>  • வருமானம்<br>  • உரிமை<br>• பரீட்சை மீதி |
| **6.0 கணக்கீட்டு வழுக்களைத் திருத்துவார்.**<br><br>6.1 பரீட்சை மீதியொன்றினால் வெளிக்காட்டப்படாத வழுக் களைத் திருத்துவார். | • கணக்கீட்டு வழுக்கள்<br>• பரீட்சை மீதியொன்றினால் வெளிக் காட்டப்படாத வழுக்கள். |
| 6.2 பரீட்சைமீதியொன்றினால் வெளிக்காட்டப்படும் கணக்கீட்டு வழுக்களைத்திருத்துவார். | • பரீட்சை மீதியொன்றினால் வெளிக் காட்டப்படும் வழுக்கள்<br>• தொங்கல் கணக்கு |
| **7.0 வணிகத்தின் பெறு பேற்றினையும் நிதி நிலைமையினையும் காலத்தினடிப் படையில் வெளிப்படுத்துவார்.**<br>7.1 வருமானங்களையும் செலவு களையும் அவற்றின் தன்மைக் கேற்ப மதிப்பீட்டிற்கு உட் படுத்துவார். | • செலவுகள்<br>  • மூலதனச் செலவு<br>  • வருமானச் செலவு<br>• வருமான வருமானம் |
| 7.2 நிதியாண்டுக்குரிய வருமா னங்களையும் செலவு களையும் ஒப்பிடுவார். | • அட்டுறு எண்ணக்கரு<br>  • அட்டுறு செலவுகள்<br>  • அட்டுறு வருமானங்கள்<br>  • முற்பணக் கொடுப்பனவுகள்<br>  • முற்பணப் பெறுவனவுகள் |

| தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் | பாடஉள்ளடக்கம் |
|---|---|
| 7.3 சரியான தகவல்களை வெளிப் படுத்துவதற்காக கடன்பட்டோர் மீதியினை சமப்படுத்துவார். | • அறவிடமுடியாக்கடன் ஏற்படுவதற்கான காரணங்கள்<br>• அறவிடமுடியாக் கடனைக் கணக்குகளில் பதிதல். |
| 7.4 நிலையான சொத்துக்களின் பெறுமானங்களை நிகழ்காலப் பெறுமானத்தில் பேணுவார். | • தேய்வு ஏற்படுவதற்கான காரணங்கள்<br>  • பௌதீகக் காரணிகள்<br>  • பொருளாதாரக் காரணிகள்<br>• தேய்வு செய்யும் முறைகள்<br>  • நேர்கோட்டு முறை (இலகுமுறை)<br>• இலகுமுறையில் தேய்வுக் கணிப்பீடும் கணக்குகளில் பதிவு செய்தலும்.<br>  • பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு |
| 7.5 வணிகத்தின் செயற்பாட்டுத் திறனை மதிப்பீடு செய்வார். | • வியாபாரக் கணக்கு<br>• கிடையமைப்பு முறை<br>• உள்ளடக்கப்படும் உருப்படிகள்<br>  • விற்பனை<br>  • உட்திரும்பல்<br>  • ஆரம்ப இருப்பு<br>  • கொள்வனவு<br>  • வெளித்திரும்பல்<br>  • கொண்டு வரும் கூலி<br>  • இறுதிச் சரக்கிருப்பு<br>  • விற்பனைக்கிரயம்<br>  • மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டம்<br>• இலாப நட்டக்கணக்கு<br>• கிடையமைப்பு முறை<br>• உள்ளடக்கப்படும் உருப்படிகள்<br>• மொத்த இலாபம்<br>• வேறு வருமானங்கள்<br>  • பெற்ற கழிவு<br>  • பெற்ற தரகு<br>  • பெற்ற வட்டி<br>• செயற்பாட்டுச் செலவுகள்<br>  • நிலைய நிர்வாகச் செலவுகள்<br>  • விற்பனை விநியோகச் செலவுகள்<br>• நிதிச் செலவுகள்<br>• ஏனைய செலவுகள் |

| தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் | பாடஉள்ளடக்கம் |
|---|---|
| | • நிதியாண்டுக்குரிய தேறிய இலாபம் அல்லது தேறிய நட்டம்.<br>• தேறிய இலாபம் அல்லது தேறிய நட்டத்தை மூலதனக் கணக்கிற்கு மாற்றல். |
| 7.6 வணிகத்தின் நிதி நிலைமை யினைவெளிப்படுத்துவார். | • ஐந்தொகை<br>• கிடையமைப்பு முறை<br>• உள்ளடக்கப்படும் உருப்படிகள்<br>  • உரிமையாண்மை<br>    • மூலதனம்<br>    • மேலதிக மூலதனம்<br>    • தேறிய இலாபம் அல்லது நட்டம்<br>    • பற்று<br><br>• நடைமுறையல்லாத பொறுப்புக்கள்<br>• நடைமுறைப் பொறுப்புக்கள்<br>• நடைமுறையல்லாச் சொத்துக்கள்<br>• நடைமுறைச் சொத்துக்கள் |
| 7.7 இலாப நோக்கற்றநிறுவன அமைப்புக்களின் பெறுபேற்றினை வெளிப்படுத்துவார். | • இலாப நோக்கற்ற நிறுவன அமைப்புக்கள்<br>• பிரதான வருமான மூலமாக அங்கத்தவர் கட்டணங்கள்<br>• இலாப நோக்கற்ற நிறுவனங்களில் பேணப்படும் பிரதான கணக்குகள்<br>  • கொள்ளல் கொடுத்தல் கணக்கு<br>  • வருமானச் செலவுக் கணக்கு<br>• வருமான மிகை அல்லது செலவு மிகை |
| **8.0 மூலதனச் சந்தையை ஆய்வு செய்வதன் மூலம் பொருத்தமான தீர்மானங்களுக்கு வருவார்.** | |
| 8.1 பல்வேறு நிதியீட்டு வழிமுறைகளைவெளிப்படுத்துவார | • பல்வேறு நிதியீட்டு வழிமுறைகள்<br>  • சாதாரண பங்குகளை வெளியீடு செய்வதன் மூலம்<br>• வங்கிக்கடன்<br>  • நீண்டகாலம்<br>  • குறுகியகாலம்<br>• ஏனைய கடன்கள்<br>  • தனிப்பட்ட<br>  • அமைப்பு ரீதியிலான |

| தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் | பாடஉள்ளடக்கம் |
|---|---|
| | • ஓவ்வொரு நிதியீட்டல் வழிமுறைகளினதும் அனுகூலங்கள்<br>• வங்கிக்கடன்<br>• தன்மையின் அடிப்படையில் குறைந்த வட்டி<br>• பண முகாமைத்துவம்<br>• பாதுகாப்பு<br>• குறைந்த இடர்<br>• பிணை இலகுவான நிபந்தனைகள்<br>• சாதாரண பங்குகளை வழங்குவதன் மூலம்<br>• சட்டரீதியான பாதுகாப்பு<br>• கூடுதலான மூலதனத்தை திரட்ட முடியுமாயிருத்தல்<br>• பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டிருத்தல்<br>• குறைந்த இடர் |
| 8.2 பொருத்தமான நிதியீட்டு வழிமுறையொன்றினைத் தெரிவு செய்வார். | • நிதியீட்டு வழியொன்றினைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள்<br>• தேவைப்படும் பணத்தின் அளவு<br>• தேவையின் தன்மை<br>• மீளச் செலுத்தும் திறன் / மீளச் செலுத்தும் நிபந்தனைகள்<br>• முன்வைக்கும் பிணைகள் செலவுகள்<br>• வணிகச் செயற்பாடுகளின் தன்மை<br>• வணிக அமைப்பின் தன்மை |
| 8.3 பல்வேறு மாற்று முதலீட்டு வழிகளை மதிப்பீட்டிற்குட்படுத்துவார். | • பல்வேறு முதலீட்டு வழிமுறைகள்<br>• சேமிப்பு வைப்புக்கள்<br>• கால / நிலையான<br>• சாதாரண<br>• சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்.<br>• காணி கட்டடம்<br>• தங்கஆபரணங்கள்<br>• பங்குச் சந்தை<br>• சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்தல் |

| தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் | பாடஉள்ளடக்கம் |
|---|---|
| | • பல்வேறு முதலீட்டு வழிமுறைகளினதும் அனுகூலங்கள்.<br>• வங்கி வைப்பு<br>• வட்டி<br>• பாதுகாப்பு<br>• ஏனைய அனுகூலங்கள்<br>• சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்.<br>• மூலதன வருமானம்<br><br>• சாதாரண பங்குகள்<br>• பங்குலாபம்<br>• மூலதன இலாபம்<br>• திரவத்தன்மை<br>• உயர்ந்த இலாபம்<br>• பிணைவைப்பு எனும் வகையில் ஏற்புடைமை<br><br>• முதலீட்டு வழிமுறையொன்றினைத் தெரிவு செய்யும்பொழுது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகள்<br>• அனுகூலங்கள்<br>• நட்டஅச்சம் (இடர்)<br><br>• நட்ட அச்சம் கூடியதும், உயர்ந்த அனுகூலங்களை கொண்டதுமான முதலீட்டு வழிமுறையொன்றாகச் சாதாரண பங்குகள்.<br><br>• நட்டஅச்சம் குறைந்ததும் குறைவான அனுகூலங்களைக் கொண்டதுமான முதலீட்டு வழிமுறையொன்றாக வங்கி வைப்புக்கள்.<br><br>• நட்ட அச்சம் குறைவானதும் சாதாரணமாக அனுகூலங்களில் கூடியதுமான முதலீட்டு வழிமுறையொன்றாக<br>• தங்க ஆபரணங்களைக் கொள்வனவு செய்தல்<br>• காணி கட்டடங்களில் முதலீடு செய்தல். |